Registered as a NewsPaper

பக்கங்கள் - iv

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

நாதம் ௧௪ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௩௩ | ஐப்பசி -07 | ௨௪-௧௦-௨௦௦௩ | வெள்ளிக்கிழமை | ஓசை ௨௪௮

கிளிநொச்சியில்
கணினி மையம்
TCC
கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்
சி-8629 யாழ். சாலை, கிளிநொச்சி.

## கராத்தே கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய றொபேட்ஸை தேசியத் தலைவர் கௌரவிப்பு





இலங்கையின் கராத்தே தந்தையும் எட்டாவது கறுப்புப்பட்டி பெற்றவருமான கிராண்ட் மாஸ்ரர் சீகான் பொனி றொபேட்ஸ் (**Grand Master Shihan Bonnie Roberts**) அவர்கள் கராத்தே கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையையும், பங்களிப்பையும் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட தேசிய விருதினையும், நினைவுப் பரிசினையும் வழங்கிக் கௌரவித்தார். நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா, தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் ரட்ணசோதி மாஸ்ரர், தமிழீழ விளையாட்டுத்துறை ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் ம. பத்மநாதன், தமிழீழ

(iv ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவரை உடன் பதவியில் இருந்து நீக்கவும்!

### நோர்வேப் பிரதமரிடம் சனாதிபதி கோரிக்கை



(கொழும்பு)

**இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சனை உடன் பதவி விலக்குமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நோர்வே பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நோர்வேத் தூதரகம் ஊடாக இக் கோரிக்கை முறைப்படி விடுக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து சனாதிபதி செயலக பேச்சாளர் ஹரிம் பீரிஸ் பி.பி.சி.க்குத் தெரிவிக்கையில், நோர்வேத் தூதுவரை தன்னை வந்து சந்திக்குமாறு சனாதிபதி முறையாக அழைப்பு விடுத்துள்ளார். அத்தோடு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் அந்தப் பொறுப்பிலிருந்து உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்ற தனது கோரிக்கையை நோர்வேப் பிரதமரிடம் தெரி

(iv ஆம் பக்கம் பார்க்க)

### –பருத்தித்துறை நகரப் பகுதியில் –

## பொதுமக்கள் மீதான தாக்குதலை கண்டித்து நாளை பேரணி

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைப் பகுதியில் இடம்பெற்ற பொதுமக்கள் மீதான தாக்குதல் மற்றும் மீன்பிடிப் படகுகள் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை என்பவற்றைக் கண்டித்து கண்டனப் பேரணி மற்றும் மறியல் போராட்டங்களுக்கு வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன.

தாக்குதலில் ஈடுபட்ட படையினர் மீது நடவடிக்கை மற்றும் பாதிக்

(iv ஆம் பக்கம் பார்க்க)

### மாட்டுவண்டி கடத்தல் விவகாரம்

## கிண்ணியாவில் எழுந்த பதற்றம் ஹர்த்தால் அனுஷ்டிப்பு ; ஊரடங்கு அமுல்

(திருகோணமலை)

கிண்ணியா-தம்பலகாமம் வீதியில் மரங்களை ஏற்றிச் சென்ற மாட்டு வண்டி ஒன்றை இனந்தெரியாதோர் கடத்திச் சென்ற சம்பவத்தைக் கண்டித்து, நேற்று கிண்ணியாவில் ஹர்த்தால் நடைபெற்றது. ஹர்த்தாலை ஒழுங்கு செய்த முஸ்லிம் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கிண்ணியா சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு திருமலைத்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினருக்கு தொலைபேசி வழங்க கட்டுப்பாடு

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

விடுதலைப்புலிகளின் கப்பல் ஒன்று எங்காவது காணப்படும் பட்சத்தில் அதனை சோதனையிடும் வரை சர்வதேச கண்காணிப்புக் குழுவிற்கு செய்மதியூடான தொலைபேசிகளை வழங்குவதில்லை என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். ஏனெனில் கடற்படை கப்பல்களில் கண்காணிப்புக் குழுவினரைக் கூட்டிச் சென்று காட்டக்கூடிய நிலை ஏற்படும்போது எதி

(iv ஆம் பக்கம் பார்க்க)

## முனைப் பகுதியில் தரித்து நின்ற படகுகளை படையினர் தாக்கி மூழ்கடித்தனர்

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து, அங்கு தரித்து நின்ற மீனவர்களது படகுகள் சில படையினரால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

(முனை, புனித தொம்மையப்பர் தேவாலய முன்றலில் கடற்கரையில் தரித்து நின்ற இரு பிளாஸ்டிக் படகுகளே படையினரால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்கு தரித்து

(iv ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யோசனைகள் கிடைத்ததும் உடனடியாகப் பேச்சுக்கு ஏற்பாடு செய்க

### நோர்வேயிடம் அரசாங்கம் கோரிக்கை

வட-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்த புலி களின் யோசனைகள் கிடைத்தவுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கூடிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசு நோர்வேத் தரப்பிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதுபாராளுமன்றக் கூட்டத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த பீரிஸ் இதனைக் கூறியுள்ளார். அத்துடன் இப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரச்சினை

(iv ஆம் பக்கம் பார்க்க)

# மீன்பிடி இறங்கு துறையை ஆழப்படுத்த மீண்டும் படையினர் முட்டுக்கட்டை!

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கின் இன்பருட்டி பகுதியில் அமைந்துள்ள மீன்பிடி இறங்கு துறையை ஆழப்படுத்த மீனவர்கள் மேற்கொண்ட முயற்சி படையினரது ஒத்துழைப்பின்மையால் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த 20 வருட காலப் பகுதிக்கு மேலாக ஆழப்படுத்தப்படாதுள்ள இவ் இறங்கு துறையினை ஆழப்படுத்துவதற்கான அனுமதியினை யாழ் படைத் தலைமை அண்மையில் வழங்கியிருந்தது.

இதையடுத்து இன்பருட்டி மீனவ சங்கம் தமது பிரதேசத்திலுள்ள மீன்பிடி இறங்கு துறையை நேற்று நண்பகல் ஆழப்படுத்தவுள்ளதாக அப்பகுதியில் நிலைகொண்டுள்ள 52-4 படைப்பிரிவுக்கு அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த இறங்கு துறைப்பகுதியில் பெருமளவிலான கலகமடக்கும் படையினர் அவசர அவசரமாக குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை அங்கு இறங்கு துறையினை ஆழப்படுத்தும் பணியில் சிரமதான அடிப்படையில் ஈடுபடவென பெருமளவிலான மீனவர்களும் வருகை தந்திருந்தனர்.

எனினும் அங்கு பிரசன்னமாகி இருந்த படை அதிகாரிகள் இறங்கு துறையினை ஆழப்படுத்தும் போது எடுக்கப்படும் முருகைக்கற்களை படகுகள் எவையும் கரையொதுங்காதவாறு கரையோரப் பகுதிகளில் குவிக்குமாறு நிர்ப்பந்தித்தனர்.

ஆயினும் மீன்பிடி இறங்கு துறையை ஆழப்படுத்துவதன் நோக்கமே மீன்பிடிப்படகுகள் சுலபமாக கரையொதுங்கக்கூடியதாக இருக்க வேண்டுமென்பதற்காகவே என மீனவர்கள் வலியுறுத்தினர். எனினும் இருதரப்புகள் விட்டுக் கொடுப்புக்களைச்செய்ய தயாராக இல்லாத நிலையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்த மீனவர்கள் இறங்கு துறையினை ஆழப்படுத்தும் பணியை கைவிட்டு வெளியேறினர். (27)

# 30ஆவது ஆண்டு நிறைவில் மலர் வெளியீடும் கருத்தமர்வும்

(அலுவலக செய்தியாளர்)

பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் 30.வது ஆண்டு நிறைவையொட்டி மலர் வெளியீட்டு நிகழ்வும் கருத்தமர்வும் இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தின் ஏற்பாட்டில் நாலையும் நாளை மறுதினமும் கிளி.மகாவித்தியாலயத்தில் மேற்படி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

நாளை மாலை 5.00 மணிக்கு பேரிணையத்தலைவர் த.யோகராசா தலைமையில் கிளி.மகாவித்தியாலயத்தில் மலர் வெளியீட்டு விழா இடம் பெறவுள்ளதென பேரிணைய பொது முகாமையாளர் கி.சிவனேசன் தெரிவித்துள்ளார். (சோ)

# நாட்டுக்கு எது நல்லது என்பதை பொதுமக்கள் தீர்மானிக்க வேண்டும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

நாட்டுக்கு எது நல்லது என பொதுமக்கள் தீர்மானிக்க வேண்டுமென அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார். சமாதானத்தை மக்கள் அனுபவிக்க வேண்டும். இரு தசாப்த காலமாக நடைபெறும் இனப்பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வருவதன் மூலம் நாட்டை பொருளாதார வளமான நாடாக மாற்றலாம் எனவும் கொழும்பு ஹொட்டல் தல தாரியில்நடந்த கூட்டமொன்றில் கூறினார். 2001ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 வீதமாக இருந்தது. இந்த வருட முதலில் 6 வீதமாக மாறும் என உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர் கரல்ட் கூறியதாக கூறினார்.

பெண்களுக்கு வீடுகளில் சுய வேலை வாய்ப்பை மேற்கொள்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க இருப்பதாகவும் தெரிவித்தார். இதன் மூலம் பெண்கள் வேலை வாய்ப்புத் தேடி வெளிநாடு செல்வது நீக்கப் படும். வீடுகளிலுள்ள குடும்பப் பெண்கள் வெளிநாடு செல்வதால் அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் வாழ்க்கை சீரழிந்து போகிறது. இதனால், அக்குடும்பம் அநாதரவான நிலையடைகிறது. இதைத் தவிர்க்கவே இவ்வேலை வாய்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக மேலும் அவர் கூறினார்.

## -பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால்-

# புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள அரசு தயாராம்!

## -வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தால் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் இராணுவ அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளதாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் இந்து பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடையுமென நான் கருதவில்லை, ஆயினும் எந்த நிலைக்கும் நாம் தயாராய் இருக்கின்றோம்.

இதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கு விடுதலைப்புலிகள் தயாரித்துள்ள இடைக் கால நிர்வாக சபைக்கான நகல்த் திட்டம் ஒரு மைல்கல் என்று இராஜதந்திரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

## - புதுக்குடியிருப்பு சிவநகர் வலயத்தில் -

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு

புதுக்குடியிருப்பு மந்துவில் சிவநகர் வலயத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு மந்துவில் அரசரட்ணம் பாடசாலையில் நேற்று முன் தினம் காலை 10.30 மணிக்கு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் த.சண்முகம் தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் அன்பரசன் ஏற்றி வைக்க, அதனைத் தொடர்ந்து தேசியக்கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர் சங்கரின் திருவுருவப்படத்திற்கு 3 மாவீரர்களின் தாயாகிய திருமதி வேலுப்பிள்ளை அவர்கள் ஈகச் சுடரினை ஏற்றி மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையினை அன்பரசன், முகுந்தன் அவர்கள் ஆற்றினர். (26)

## -பொலநறுவைப் பகுதியில்-

# ஆயுததாரிகளின் தாக்குதலில் மன்னார்வாசி ஒருவர் பலி

ரி.56 தன்னியக்கத் துப்பாக்கி, கைக்குண்டுகள் சகிதம் பொலநறுவை கல்லேல்ல கிராமத்தை ஊடுருவிய குழுவொன்று நேற்று முன் தினம் அங்கு அழகம் ஒன்றைத் தாக்கியதில் கடை உரிமையாளர் பலியாகியதுடன் சம்பவ இடத்திலிருந்த நால்வர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவத்தில் பலியானவர் மன்னாரைச் சேர்ந்த தங்கையா என்பவர் ஆவார்.

இவர் அப்பகுதியில் வாடகை அடிப்படையில் அழகம் ஒன்றை நடத்தி வந்தவர் எனக் கூறப்படுகிறது. மேற்படி நிலையம் முஸ்லிம் ஜும்மா பள்ளி வீதியில் அமைந்துள்ளதாகவும் மேலும் பல வியாபார நிலையங்களும் சேதமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படும். அதேவேளை, மேற்படி ஆயுதக் குழுவினர் திட்டமிட்டே மேற்படி நபரைத் தாக்க வந்ததாகவும் அங்கிருந்தோர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் தொடர்கின்றன. சம்பவத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

# தீபாவளியன்று விடுமுறையாதலால் போராட்டத்தை ஒழுங்குசெய்தோம்

## - சு.க.பா.உ.சரத் அமுனுகம

(கொழும்பு)

தீபாவளி தினத்தன்று பொது விடுமுறைதினம், ஆகையால் அரசாங்கத்திற்கு எதிரான பேரணியை ஒழுங்கு செய்ததாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித் துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம நேற்று முன் தினம் இதுதொடர்பாகக் கொழும்பில் ஊடகவிளக்கம் ஒன்றை அளித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கும் எதிராக 'மக்கள் படை' என்ற பெயரில் 'பொறுத்தது போதும்' என்ற தொனிப் பொருளில் இந்தப் பேரணி நடாத்தப்படுகிறது.

இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்பின் 5 பிரதான வீதிகளில் இருந்து பேரணிகள் புறப்படுகின்றன. மாலை 4 மணியளவில் இந்தப் பேரணிகள் கொழும்பு நகரசபை மைதானத்தை சென்றடைந்ததும் அங்கு பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது. இதில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பங்கேற்கவிருக்கிறார். இந்த எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்குமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் சரத்அமுனுகம ஊடகவியலாளர் ஒருவரின் மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில், முல்லைத்தீவு கடலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கப்பலைப் படையினர் சுற்றி வளைத்தபோது அது தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தகவல் கொடுத்த போர்நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர் நாடு கடத்த வேண்டுமென வலியுறுத்துவதாகக் கூறினார்.

## — துணுக்காய்ப் பிரதேசத்தில் —

# உறக்கத்தில் இருந்தவேளை குடும்பஸ்தர் மீது வாள் வெட்டு

துணுக்காய்ப் பகுதியில் வாள் வெட்டுக்கு இலக்காகிய ஒருவர் மல்லாவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

துணுக்காய்ப் பிரதேச ஏ.பி.சி. வீதியில் வசித்துவரும் நான்கு பிள்ளைகளின் தந்தையான செல்லையா ஆறுமுகம் (வயது-37) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவர் ஆவார்.

கடந்த 20ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் உறக்கத்தில் இருக்கும்போது சில நபர்கள் வீட்டுக்குள் நுழைந்து நபரின் முகத்திற்கு ஒளி பாய்ச்சி தலையிலும் கையிலும் பலமாக வாளால் வெட்டியுள்ளனர். நபரின் மனைவி கூக்குரல் இட்டதும் நபர்கள் தப்பிச் சென்றனர். பலத்த வெட்டுக் காயமடைந்த நபர் அயலவரின் உதவியுடன் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இது குறித்து துணுக்காய் காவல்துறைப் பணிமனையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (24)



# எமது மக்கள் அறிவும் வீரமும் மிக்கவர்களாக வளர வேண்டுமென்பதே தலைவரின் விருப்பாகும்

## – கணினி கண்காட்சி மண்டப திறப்பில் கேணல் பால்ராஜ்

(அலுவலக செய்தியாளர்)

எமது மக்கள் அறிவுரீதியாகவும் வீரம்மிக்கவர்களாகவும் வளர வேண்டும் என்பதே எமது தேசியத் தலைவரது ஆவல் என தமிழீழ மாணவர் அமைப்பால் நேற்று முன்தினம் முள்ளியவளையில் ஒழுங்குபடுத்தப்பட்ட கணினி கண்காட்சி மண்டபத்தை திறந்து வைத்து சிறப்புரை உரையாற்றுகையில் தளபதி கேணல் பால்ராஜ் தெரிவுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இன்று மாணவர் அமைப்பினரால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்படும் படுத்துவதற்காக கணினி கற்பிக்கப்படுகிறது. எமது பகுதிகளில் இளம் தலைமுறையினரால் கூட கணினிக் கல்வி கற்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. ஆனாலும் தற்போதைய சூழலைப் பயன்படுத்தி நாம் அவர்களுக்கு ஏற்றவாறு வளர்ச்சியடைய வேண்டும்.

எமது தேசியத் தலைவரை பொறுத்தவரை எமது மக்கள் அறிவு ரீதியாகவும் வீரம் மிக்கவர்களாவும் வளர வேண்டும் என்பதே அவரது ஆவல். அதற்கமைவாக எமது மக்கள் பல ராணுவ அடக்கு வாரங்களுக்கு மத்தியிலும் பல வழிமுறை தெரியும்.

தற்போது எமது வட-கிழக்குப் பகுதிகளில் விரல்விட்டு எண்ணக் கூடிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் கட்டுமானப் பணிகளுமே நடைபெற்றுள்ளதே தவிர வேறு எதுவுமே நடைபெறவில்லை. நாம் இந்த போர்நிறுத்தம் வரும்போதும் பலமாகத் தான் இருந்தோம். தற்போதும் பலமாகவே தான் இருக்கிறோம்.

எனவே தற்போது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீங்கள் அறிவுரீதியாக உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும்



இந்தக் கணினிக் கண்காட்சியின் நோக்கம் கணினி ரீதியான அறிவை மாணவர்களுக்கு புகட்டுவதே ஆகும். கடந்த 20 ஆண்டு காலத்திற்கு மேலாக எமது மாணவர்கள் கல்வி ரீதியாக பல ஒடுக்குமுறைகளை சந்தித்துள்ளார்கள். அவர்கள் சந்தித்த ஒடுக்குமுறைகளில் கணினிக்கல்வி முற்றாக ஒடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் இவர்களுக்கான கணினிக் கல்வி ஓரளவு வழங்கப்படுகிறது. இந்த வகையில் இத்தகைய கணினிக் கண்காட்சி நிகழ்வுகள் முக்கியம் பெறுகிறது.

இன்று வெளிமாவட்டங்களை, வெளிநாடுகளை எடுத்துப் பார்த்தால் குழந்தைகள் தொடக்கம் முதியவர்கள் வரை கணினியை மிகவும் எளிமையான முறையில் கையாளுகின்றனர். அங்கே குழந்தைகளின் மூளையை வளர்ச்சிப் களைப் பயன்படுத்தி இன்று வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எமது தாயக விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு துறைகளையும் தலைவர் கணினி ரீதியில் வளர்த்து வருகிறார். அவர்களும் அதனை சரியான முறையில் பயன்படுத்தி பல வளர்ச்சிகளையும் கண்டிருக்கிறார்கள். எனவே மாணவர்கள் இந்த வளர்ச்சி நிலைகளைக் கருத்திற் கொண்டு அதிக கவனம் செலுத்தி இந்த கணினிக் கல்வியைக் கற்க வேண்டும்.

தற்போது எம்மால் சர்வதேச சட்டவல்லுனர்களின் ஆலோசனைகளுக்கமைவாக தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு எதிர்வரும் 31ஆம் திகதி சிறிலங்கா அரசிடம் கையளிக்கப்பட இருக்கிறது. கடந்த காலங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எப்படி இருந்தது? ஏன் தோல்வியடைந்தது என்பது உங்களுக்குத் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை ஊரகவளர்ச்சிப் பணி பொறுப்பாளர் அன்பரன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் முகுந்தன் ஏற்றி வைத்தார். மாவீரர் சங்கரின் உருவப்படத்திற்கு மாவீரர் பொன் செழியனின் பெற்றோர் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து கண்காட்சி மண்டபத்தை தளபதி கேணல் பால்ராஜ் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததை அடுத்து வடிவமைக்கப்பட்ட மாதிரி கணினியை முள்ளியவளைப் பிரதேசப் பொறுப்பாளர் சரவணன் திரைநீக்கம் செய்து வைத்தார். சிறப்புரைகளை கேணல் பால்ராஜ் உள்ளிட்டோர் நிகழ்த்தினர்.

மேற்படி கணினிக் கண்காட்சி 25ஆம் திகதி வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

## ரயில்விபத்து

தென்னிந்தியாவில் பயணிகள் ரயில் வண்டி நேற்று தண்டவாளத்தை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 07 பேர் உயிரிழந்துள்ளதுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர். கர்நாடக மாநிலத்தில் மைசூரிற்கும் பெங்களூரி நகம் இடையிலான ஒரு பகுதியில் இவ் விபத்து நடைபெற்றுள்ளது. ரயில் வண்டியின் 04 பெட்டிடஸ் கவிழ்ந்ததாகவும் ஒரு பெட்டி தடம் புரண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.கல்வி வலயங்களில் த.க.மே.பேரவை அலுவலகங்கள்

யாழ்.மாவட்ட சகல கல்வி வலயங்களிலும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை அலுவலகம் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு வலயங்களிலும் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான குறைபாடுகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் இவ்வாறு திறந்து வைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## ஊடகவியலாளரின் பணிக்கு படையினர் முட்டுக்கட்டை

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் தமது கடமைகளைச் செய்ய விடாது தடுக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாகப் படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே ஏற்பட்டிருந்த முறுகல் நிலையைப் படம் பிடிக்க முற்பட்ட ஊடகவியலாளர் ஒருவரை படை அதிகாரி ஒருவர் பலாத்காரமாகத் தடுத்து நிறுத்தியுள்ளார். அத்துடன் அவரிடமிருந்த புகைப்படக் கருவியையும் பறித்தெடுக்க அவ்வதிகாரி முற்பட்டுள்ளார்.

தம்மை ஊடகவியலாளரென உறுதிப்படுத்த அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டையைக் காண்பித்த போதிலும் புகைப்படமெடுக்க அப்படை அதிகாரி அனுமதிக்கவில்லை.

அதேவேளை, அதே சூழலில் நேற்று முன்தினம் இரவு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களிடம் பேட்டிகளை ஒலிப்பதிவு செய்துகொண்டிருந்த இன்னுமொரு ஊடகவியலாளரது ஒலிப்பதிவுக் கருவியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் இச்சம்பவம் ஒரு சிறு விபத்தே எனத் தெரிவித்த அப்படையதிகாரி, அதனைப் பெரிதுபடுத்த வேண்டாமென ஊடகவியலாளர்களைக் கேட்டுக் கொண்டார். (27)

## முல்லை வாகன உரிமையாளர் கிளி.யில் பதிவு செய்யலாம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்துக்குரிய மோட்டார் வாகன உடமை மாற்றம் புதிய மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்தல் தொடர்பான நடவடிக்கைகளை எதிர்வரும் 01.11.2003. ஆம் திகதிமுதல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்துக் கிளையில் மேற்கொள்ளலாம் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பதிவுக்குரிய வாகனங்களுக்கு வரி அனுமதிப் பத்திரம் தொடர்ந்தும் முல்லைத்தீவு மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து கிளையிலேயே வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துள்ளார். (சோ)

## அரச ஊழியர்களின் சம்பளம் வரவு-செலவுத் திட்ட மூலம் அதிகரிக்கப்படும்

### -அமைச்சரவைக் கூட்டத்தில் சொக்ஸி

அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள அதிகரிப்பை வழங்கவுள்ளதாக நிதியமைச்சர் சொக்ஸி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சனாதிபதி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அத்துடன் அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு தொடர்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய சம்பள அதிகரிப்புத் திட்டம் அமுல் செய்யப்படும் எனக் கூறியுள்ளார்.

## மீள் குடியமர அனுமதித்தும் குடியமர முடியா அவலம்!

(யாழ்ப்பாணம்)

இத்தாவில் மற்றும் வேம்பொடுகேணி ஆகிய பிரதேசங்களில் படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் கூட குடியமர முடியாத நிலை தோன்றியுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

1995 ம் ஆண்டுகளில் இருந்து இப் பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளபடையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து இப் பகுதியில் மக்களை குடியமர அனுமதித்த படையினர்,

இங்கு குடியமர செல்வோர் தவிர வேறு எவரையும் இப்பகுதிக்கு செல்ல அனுமதிக்கமுடியாது என்வும் அவ்வாறு செல்வதாயின் தம் அனுமதியுடனேயே உட்செல்ல அனுமதிக்கப்படும் எனவும் அறிவுறுத்தியிருப்பதுடன்

போக்குவரவு மற்றும் சந்தை மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கும் படைதரப்பு முட்டுக்கட்டையாக இருந்தாலும் இப்பகுதியில் தாம் குடியமர முடியாத நிலை தோன்றியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் இப்பகுதி 1000 குடும்பங்களின் குடியேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. (33)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் மன்னாரில் 7500 மீனவக் குடும்பங்கள் பாதிப்பு!

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதால் மன்னார் மாவட்டத்தில் சுமார் 7500 மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறைந்து காணப்பட்டன. எனினும் கடந்த 11ஆம் திகதி முதல் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் ஆரம்பமாகியுள்ளதாக மன்னார் மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

வாரத்தில் திங்கள், புதன் மற்றும் சனி ஆகிய நாட்களில் சுமார் 1500க்கும் மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள் இலங்கை கடற் பரப்பின் பள்ளிமுனை வரையில் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த இழுவைப் படகில் ஒரு படகின் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான மீனகள் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் வருடம் ஒன்றுக்கு 10 கோடி ரூபா நட்டமடைகின்றனர். (32)

## பாதுகாப்புச் சபையில் புதிய அங்கத்துவம் பெறும் நாடுகள்

ஐ.நா. பொதுச்சபைப் பாதுகாப்புச் சபையில் புதிய அங்கத்தவர்களாக அல்ஜீரியா, பிரேசில், பிலிப்பைன்ஸ், ருமேனியா, பெனின் ஆகியவற்றைத் தெரிவு செய்யவுள்ளது.

இவை அடுத்த வருடம் சனவரி முதலாம் திகதி முதல் பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடுகளாக இயங்கும் என இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார். அதன் நிரந்தர அங்கத்தவர்களைத் தவிர ஏனைய ஐந்து நாடுகள் இரண்டு வருடங்கள்அங்கம் வகிக்கவுள்ளன அதற்கமைய கமரூல், கினியா, சிரியா, பல்கேரியா, மெக்ஸிக்கோ என்பவற்றின் பதவிக்காலம் சனவரியுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கில் தாக்குதல்களைத் தடுக்க அமெ.வில் இருந்து புதிய கருவிகள்

அமெரிக்கா கெரிலாத் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் புதிய தொழில் நுட்பக்கருவிகளை ஈராக்கிற்கு அனுப்பியுள்ளது.

இவை வீதியோரங்களில் புதைக்கப்பட்டுள்ள குண்டுகள் கண்ணிவெடிகள் என்பவற்றை கண்டுப்பிடிக்ககூடியவையென அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக் கருவிகள் லேசர் முதல் சகல வகையான தொழில்நுட்பங் களிலும் பயன்படுத்தவுள்ளன. அவை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நடைமுறைக்கு வரும் என கூறப்படுகிறது.

## 500 கோடி டொலர் உதவி

ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு 300 முதல் 500 கோடி அமெரிக்க டொலர்கள் நிதியுதவியாக வழங்கவுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

# பெண்கள் உபகுழு-பெண்கள் பிரதிநிதிகள் கிளி.யில் சந்தித்துக் கலந்துரையாடல்

பெண்களுக்கான உபகுழுவின் அனுசரணையாளர் அன்சித் பயோடோ அவர்களும் இலங்கைக்கான நோர்வே தூதரக அதிகாரி வோன்சி அவர்களும் நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியல்துறை மகளிர் நடுவப்பணியகத்திற்கு வருகை தந்தனர். அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி அவர்கள் அரசியல்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி அரசியல்துறை மகளிர் நிர்வாகப் பொறுப்பாளர் பருதி ஆகியோர் வரவேற்றனர். பின்னர் நடைபெற்ற சந்திப்பில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின் போது இராணுவ ஆக்கிரமிப்பு போர்க்காலங்களில் மக்கள் குறிப்பாகப் பெண்கள் அனுபவித்த நெருக்கடிகள், துன்பங்கள் தொடர்பாக அம்மாவட்ட பெண்கள் பிரதிநிதிகள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் போர் காரணமாக சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் உயர்பாதுகாப்பு வலயங்களால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தமது வளம் மிக்க வயல் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு உள்ளடக்கப்பட்டதனால் தங்களது பொருளாதார நிலை பின் தங்கி உள்ளமை போன்ற தமது பிரச்சினைகளை வலியுறுத்தினர்.

தொடர்ந்து பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடாத்தப்படும் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வெற்றிமனைக்குச் சென்று அங்குள்ள பயனாளிகளுடன் கலந்துரையாடினர். இதில் காணப்பட்ட வசதியீனங்களையும் நேரடியாகப் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து சமூக முன்னேற்ற நிறுவனத்தினால் நடாத்தப்படும் பெண்களுக்கான தொழில் பயிற்சிகளையும் சிறு ஆடைத் தொழிலகத்தினையும் கட்டடக்கல் உற்பத்தி நிலையத்தினையும் பார்வையிட்டனர்.

மதிய உணவின் பின் கிளிநொச்சியில் அமைந்துள்ள மீள்குடியேற்ற கிராமமான சாந்தபுரத்திற்குச் சென்று அங்கு வசிக்கும் பெண்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். அப் பெண்கள் தங்களது அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட முடியாதுள்ளமையையும் நிம்மதியான வாழ்க்கை ஒன்று தேவை என்றும் வலியுறுத்தினர். விடுதலைப புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக வரைவு தமது அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியதாகவும் தென்னிலங்கை அரசினதும் சர்வதேசத்தினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் பெண்கள் கூறினர்.

# நெருப்பாற்று நீச்சலில் 10 ஆண்டுகள் திருமலையில் நேற்று அறிமுக விழா

லெப். கேணல் சேகர் அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவை ஒட்டி திருகோணமலை இந்து கல்லூரியில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முதல் நூலான நெருப்பாற்று நீச்சலில் 10ஆம் ஆண்டுகள் எனும் நூலின் அறிமுக விழா சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் போராளி பாவலன் தலைமையில் இடம்பெற்றது.

லெப். சீலன் அவர்களின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை லெப். சீலன் அவர்களின் சகோதரனாகிய லூக்காஸ் இக்னோசியஸ் அவர்கள் ஏற்றிவைத்தார். பின்னர் மலர் மாலையினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் இருந்த மேஜர் றோய் அவர்களின் தாயாரும், மூன்று மாவீரர்களின் தந்தையுமான இராமநாதன் அவர்களும் அணிவித்தனர்.

வரவேற்புரையினை படையணி அரசியல் பொறுப்பாளர் காண்டீபன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையினைத் திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் காருணியா நிகழ்த்தினார்.

நூலினை படையணியின் தளபதி கோபித் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை லெப். சீலன் அவர்களின் சகோதரனாகிய லூக்காஸ் சேவையர் அவர்கள் பெற்றுக் கொண்டார். வெளியீட்டுரையினை படையணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான அமுதாப் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் தேவகடாச்சரம் அவர்களும், திருமலை மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ந. ஆனந்தராசா அவர்களும் நிகழ்த்தினர். இந் நிகழ்வில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து சிறப்பித்தனர். (25)

## மக்கள் – இராணுவம் முறுகல் குறித்து

# கண்காணிப்புக் குழுத் தலைவர் யாழ்.இல் புலிகளுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் இராணுவம் மற்றும் பொதுமக்களுக்கிடையிலான முறுகல் நிலையும் அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து ஆராயுமுகமாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலஃசன் நேற்று யாழ். குடா நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார். பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று மாலை 2.00 மணிக்கு யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் யாழ். மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், பிரதித் தலைவர் ஆகியோருடன் யாழ். மாவட்டத்தில் கண்காணிப்புக் குழுவினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய கண்காணிப்பு நடவடிக்கை குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மனனை யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் சந்தித்து கண்காணிப்புக் குழுத் தலைவர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது யாழ். மாவட்டத்தில் இராணுவம் மக்களை சீண்டும் விதத்தில் தொடர்ந்தும் செயற்படுவதாக துணைப் பொறுப்பாளர் செம்மனன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்து நேற்று மாலை அரச அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடிய ரெலஃசன் தலைமையிலான குழுவினர் இன்று யாழ். மாவட்டத்தில் உள்ள முக்கிய மக்கள் அமைப்புக்கள், அரச படைகளின் தலைமை ஆகியவற்றைச் சந்தித்து கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் பொதுமக்களுக்கும் படைத் தரப்பினருக்கும் இடையிலான உறவுகள் பெருமளவில் சீர்கெட்டு வருகின்ற நிலையில் அவரது விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (33,27)

## மோட்டார் ஊர்திகள் திருத்தக உரிமையாளர்கள் கவனத்திற்கு

ஊர்தி திருத்தும் நிலையங் களில் திருத்துவதற்காய் வைத்திருக்கும் அனைத்து ஊர்திகளும் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்டு தமிழீழ அடையாள இலக்கம் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் சில ஊர்தி திருத்தும் நிலையங்களில் காணப்படும் மோட்டார் ஊர்திகள் பதிவுக்குட்படுத்தப்பட்டு இலக்கத்தகடு இன்றி நிற்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் தங்களிடம் திருத்தத்திற்கு விடப்பட்டிருக்கும் மோட்டார் ஊர்தி இயந்திரங்களும், அடிச்சட்டங்களும் பதிவுக்குட்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு பதிவுக்கு உட்படுத்தப்படாத ஊர்திகளும், இயந்திரங்களும் அடிச்சட்டங்களுக்கு வைத்திருப்போர் மீது தொடர்ந்தும் நீதிமன்றம் ஊடாக 01.11.2003தொடக்கம் ஊர்திப் பதிவுப் பகுதியினர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள் வர் என்பதை மோட்டார் ஊர்திகள் திருத்துனர்களின் கவனத் திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதியினர் அறியத் தருகின்றனர்.

### முனைப்..

நின்ற கட்டுமரமொன்றும் அதனில் பொருத்தப்பட்டிருந்த மீன்பிடி வெளியிணைப்பு இயந்திரமும் அடித்துச் சேதப்படுத்தப்பட்டது..

இதேவேளை நேற்றுக்காலை முனைப் பகுதியில் திரண்ட நூற்றுக்கணக்கான மீனவர்கள் கடலில் மூழ்கியிருந்த பிளாஸ்டிக் படகுகள் மற்றும் கட்டு மரத்தினை மீட்டுக் கரையேற்றினர். மூழ்கடிக்கப்பட்ட படகுகளில் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது தாக்கப்பட்ட பீற்றர் மாறனிற்குச் - சொந்தமானதெனத் தெரியவருகின்றது.

இதனிடையே முனை இறங்குதுறையில் தரித்துநின்ற மற்று மோர் மீன்பிடிப் படகு காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் நள்ளிரவுவரை அங்கு குவிந்திருந்த படையினர் படகைக் கட்டியிருந்த கயிற்றினை அறுத்தெறிந்ததால், படகு கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாமென நம்பப் படுகின்றது. (27)

### கண்காணிப்புக்...

ரிக் கப்பல்கள் தப்ப முடியும் எனத் தெரிவித்துள்ள அவர்,

ஒரு கப்பலை சோதனையிடும் வரையில் செய்மதி தீ தொலைபேசியை இவர்களுக்கு வழங்குவதில்லை எனவும் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சர், இதன் மூலம் விடுதலைப்புலிகளுக்கு தகவல்களை வழங்கலாம் என்ற சந்தேகத்தில் தான் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமருக்கு வெகுவிரைவில் விளக்கம் அளிக்கப்போவதாகவும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (32)

### கராத்தே...

விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். எழுபத்துநான்கு வயது நிரம்பிய கிரான்ட் மாஸ்ரர் பொனி றொபேட்ஸ் அவர்கள் மட்டக்களப்பு கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சர்வதேச கராத்தே போட்டிகளில் முதன் முதலில் கலந்துகொண்ட தமிழ் மகன் என்ற பெருமைக்குரியவர். யாழ் மண்ணில் கராத்தே கலையை அறிமுகப்படுத்திய வரும் இவரே. பொனி றொபேட்ஸ் அவர்கள் சர்வதேச சோட்டோகான் கராத்தே சங்கத்தின் ஜப்பானால் அங்கீகரிக்கப் பட்ட ஏகபிரதிநிதியாக இலங் கையில் இருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வின் இறுதியில் கிரான்ட் மாஸ்ரர் பொனி றொபேட்ஸ் அவர்கள் தமிழீழத்தில் கராத்தே கலையின் வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டிற்கும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி கௌரவ விருதாக ஆறாவது கறுப்புப் பட்டியையும், அதற்கான சான்றிதழையும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார்.

### [illegible]...

வித்து விடும்படி அவர் கூறியிருக்கின்றார். சில காலமாகவே ரெலவ்சனது நடவடிக்கைகள் மிகவும் அதிருப்தியளிப்பவையாக இருக்கின்றன. அவரது நோக்கம் மற்றும் பக்கச் சார்பற்ற தன்மை குறித்து கடுமையான சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. அவரது கடமைகளை அவர் எந்த வகையில் நிறைவேற்றுகின்றார். குறிப்பாக அண்மைய நாட்களாக நடைபெற்ற நிகழ்வுகளை வைத்துப் பார்க்கையில் அவரது செயற்பாடுகள் அதிருப்தியை தந்திருக்கின்றன.

அதிலும் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியின் திறன் பற்றியும் சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. போர்நிறுத்தம் நல்ல வகையில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால் களநிலவரத்தை ஒழுங்காகக் கண்காணிக்க வேண்டியது அவசியம். ஒழுங்கான கண்காணிப்பு இல்லாவிட்டாலும் பக்கச் சார்பற்ற தன்மை இல்லாத போதிலும் கடமையாற்றுவதில் சரியான நோக்கமும் குறிக்கோளும் இல்லை என்கிற பட்சத்திலும் சமாதான முயற்சிகள் கடுமையாக பாதிக்கப்படும். தேசிய பாதுகாப்பில் பாரதூரமான பின்விளைவுகளை அது ஏற்படுத்திவிடும்.

கண்காணிப்புக் குழுத் தலைவரை மாற்றுதல் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது. எங்களைப் பொறுத்த மட்டில் ஒழுங்கான முறையில் கண்காணிப்புப் பணி செய்யாமலும் பக்கச்சார்புடனும் முறையான குறிக்கோள் இன்றியும் நடந்து கொள்வது தான் சமாதான முயற்சிகளைப் பாதிக்கின்ற விடயமாகும். ஏற்கனவே கண்காணிப்புக் குழுவின் தலைவர் நோர்வேயால் மாற்றப்பட்டதைப் போல இப்போது நாங்கள் ஒரு மாற்றத்தை கோருகிறோம் என்று மேலும் கூறினார்.

இதேவேளை, இவ்விடயம் குறித்து தற்போதைக்கு தன்னால் எவ்வித கருத்தும் கூற முடியாது என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் கூறியுள்ளார்.

### புலிகள்...

கள் பற்றி கலந்துரையாட புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளார்களெனக் கூறியுள்ளார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவொரு முக்கிய திருப்புமுனையாகுமென அவர் கூறியுள்ளார். இலங்கையின் சமாதான முயற்சிகளைத் தவறாக சித்தரிக்கும் வகையில் எதிர்க் கட்சியின் சதித்திட்டங்களை இந்தியா புறக்கணித்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகள் இந்தியாவிற்குப் பாதகமான விதத்தில் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக சித்தரிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் ஒரு சிலர் முயற்சி செய்தார்களென அமைச்சர் கூறியுள்ளார். இதனை இந்தியா அதிருப்தியுடன் நோக்குகிறதென அவர் கூறியுள்ளார்.

### பொதுமக்கள்...

கப்பட்டவர்களுக்கான நஷ்டஈடு என் பவற்றுடன் பாஸ் நடைமுறைகளை நீக்கக்கோரியே இவ்வெதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மீனவ சங்கங் கள் அழைப்பு விடுத்துள்ளன.

நாளை சனிக்கிழமையன்று பருத் தித்துறை நகரப் பகுதியில் இடம் பெறவுள்ள இவ்வெதிர்ப்புப் போராட் டத்தில் அப்பகுதியைச் சேர்ந்த அனைத்து மீனவர்களும் தமது தொழில்களைப் பகிஷ்கரித்து பங்கெடுப்பர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ்வெதிர்ப்புப் போராட்டத்தின் போது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினதும், மனித உரிமைகள் ஆணைக்குழுவினது பிரதிநிதிகளையும் ஆஜராகியிருக்குமாறும் மீனவ சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (27)

### கிண்ணியா...

தலைவர் அப்பால் புர்கான் ஹார்த் தாலை முடிவுக்குக் கொண்டு வர முடியாத நிலையில் நேற்றுப் பிற்பகல் திருமலை திரும்பினார். கிண்ணியாவில் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பேசிக்கொண்டிருந்த போது சில முஸ்லிம் இளைஞர்கள் ஆலங்கேணி தமிழ் கிராமத்திலிருந்து ஆட்டோ ஒன்றில் வந்த தமிழர் ஒருவரை மறித்து, அவரிடம் ஆயுதம் உள்ளதா என்று சோதனை செய்யும்படி கண்காணிப்புக் குழுவினரைக் கேட்டனர். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். பின்னர் அங்கு நின்ற இராணுவத்தினரைக் கேட்டனர். இராணுவத்தினர் அத்தமிழரைச் சோதனை செய்துவிட்டு, அவரிடம் ஆயுதங்களில்லை என்று கூறினார். பின்னர் முஸ்லிம் இளைஞர்கள் மாட்டுவண்டிலைத் திருப்பித் தரும்வரை, ஆட்டோவைத் தாங்கள் வைத்திருக்கப்போவதாகப் படையினருக்குத் தெரிவித்தனர். ஆனால் படையினர் ஆட்டோவையும் அதில் வந்த தமிழரையும் தங்களுடன் கூட்டிச் சென்றனர். அதனையடுத்துப் பதற்றநிலை ஏற்பட்டது. முஸ்லிம் இளைஞர் குழு ஒன்று கட்டுப்பாட்டை மீறித் தாக்குதலில் ஈடுபட ஆரம்பித்தது. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் எதுவித பிரயோசனமும் இல்லை என்று கூறி, கிண்ணியாவில் உள்ள மூன்று முஸ்லிம்களின் வீடுகளையும்

(எம்.ஏ.எம்.மஹ்ரூப், கே.எம். தௌபீக் எம்.எஸ்.தௌபீக், முஸ்லிம் இளைஞர் குழு) தாக்கிச் சேதப்படுத்தியதாக பொலிசார் தெரிவித்தனர்.

அதனையடுத்து கிண்ணியா நகரில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டது. இன்று காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப் படும் என்று பொலிசார் தெரிவித்தனர். (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.